# TNPSC GROUP II TEST BATCH 2024
## TEST V பொதுத்தமிழ் (11, 12ஆம் வகுப்பு தமிழ்)

1. கீழ்க்கண்ட கூற்றுகளில் தவறானதை தேர்வு செய்க
   a. உயிரெழுத்துகள் பன்னிரெண்டும் மொழிக்கு இறுதியில் மெய்யுடன் இணைந்த நிலையில் மட்டுமே இடம்பெறும்
   b. ஆயுதம் மொழி இறுதியில் இடம் பெறாது
   c. மொழி இறுதி எழுத்துகளாவன மொத்தம் 24 ஆகும்
   d. மெய்யெழுத்துகள் பதினெட்டும் மெய் வடிவில் சொல்லுக்கு முதலில் இடம்பெறாது. அவை உயிருடன் இணைந்த மொழிக்கு முதலில் வருகின்றன.
   e. விடை தெரியவில்லை

2. பின்வருவனவற்றை ஆய்க
   1. பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் பகுபதங்கள் என்பர்
   2. வினைப்பகுபதங்கள் பெயர்ப்பகுபதங்களைக் காட்டிலும் மிகுதியாக வழக்கத்தில் உள்ளன
   3. ''பகுதி'' பெரும்பாலும் சொற்பொருளையும், ''விகுதி'', ''இடைநிலை'' ஆகியன இலக்கணப் பொருளையும் தருகின்றன.

   a. 1, 2, 3 சரி b. 1, 2 மட்டும் சரி c. 1, 3 மட்டும் சரி
   d. 2, 3 மட்டும் சரி e. விடை தெரியவில்லை

3. ''காழ்வரை நில்லாக் கடுங்களிற்று ஒருத்தல்
   யாழ்வாரைத் தங்கி யாங்கு'' – என்ற அடிகள் உள்ள நூல்?
   a. திருக்குறள் b. குறுந்தொகை c. கலித்தொகை
   d. பரிபாடல் e. விடை தெரியவில்லை

4. கீழ்க்கண்ட கூற்றுகளுள் சரியானவற்றைத் தேர்வு செய்க
   1. தாயுமானவர் பிறந்த ஊர் நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள பழவேற்காடு
   2. இவர் காலம் கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டு
   3. தாயுமானவர் திருப்பாடல் திரட்டு என்பது இவர் எழுதிய நூல்
   4. திருச்சியை ஆண்ட விசயரகுநாத சேதுபதியிடம் கருவூல அலுவலராகப் பணியாற்றியவர்

   a. அனைத்தும் சரி b. 1, 2, 3 சரி 4 தவறு c. 2, 3 சரி 1, 4 தவறு
   d. 2, 3, 4 சரி 1 தவறு e. விடை தெரியவில்லை

5. முற்றியலுகரம் பற்றிய கூற்றுகளில் தவறானது எது?
   a. முற்று பெற்ற உகரம் முற்றியலிகரம் எனப்படும்
   b. இது தன் மாத்திரை அளவிலிருந்து குறையாமல் ஒலிக்கிறது
   c. தனிக்குறிலை அடுத்து வரும் வல்லின உகரங்கள்
   d. ஈற்றிலுள்ள மெல்லின, இடையின உகரங்கள்
   e. விடை தெரியவில்லை

6. தவறான ஒன்றைத் தேர்ந்தெடு

a. க. சச்சிதானந்தன் இலங்கையில் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பருத்தித் துறையில் பிறந்தவர்

b. இலங்கை பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசியராகப் பணியாற்றினார்

c. தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மும்மொழிப் புலமைப் பெற்றிருந்தார்

d. ஆனந்தத்தேன் (கவிதைத்தொகுதி 1954) அன்னபூரணி (புதினம்) யாழ்ப்பாணக் காவியம் முதலியவை இவரது படைப்புகள்

e. விடை தெரியவில்லை

7. சீனிவாச காந்தி நிலையம் அமைத்தவருக்கு பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்ட ஆண்டு?

a. 1964 b. 1965 c. 1969

d. 1967 e. விடை தெரியவில்லை

8. சி.சு. செல்லப்பாவின் "சுதந்திர தாகம்" என்ற நாவலுக்கு சாகித்திய அகாதெமி விருது கிடைத்த ஆண்டு?

a. 2000 b. 2003 c. 2001

d. 2002 e. விடை தெரியவில்லை

9. "அறிவியல் தமிழர்" என அழைக்கபபடுபவர்?

a. பெ.நா. அப்புசாமி b. மயிலை. சீனி c. சுஜாதா

d. மீரா e. விடை தெரியவில்லை

10. குற்றியலுகரப் புணர்ச்சிக்கு பொருந்தாத விதி எது / எவை?

1. உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்
2. முற்றும் அற்று ஒரோ வழி
3. உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே
4. தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்
5. நெடிலோடு உயிர்த்தொடர் குற்றியலுகரங்களுள் [ட, ற] ஒற்று இரட்டும் வேற்றுமை மிகவே

a. 2, 3, 4 மட்டும் b. 2, 4 மட்டும் c. 1, 3, 5 மட்டும்

d. 2, 3, 4 மட்டும் e. விடை தெரியவில்லை

11. கூற்றுகளை ஆராய்க

1. துணையாய் வருவது தூய நற் கல்வி – திருமூலர்
2. கல்வி அழகே அழகு – சமண முனிவர்கள்
3. இளமையில் கல் - ஔவையார்
4. பள்ளி – திவாகர நிகண்டு
5. கல்லூரி – மணிமேகலை

a. 1, 2, 3, 4, 5 சரி b. 1, 2, 3 சரி 4, 5 தவறு c. 2, 3, 4 சரி 1, 5 தவறு

d. 2, 3, 5 சரி 1, 4 தவறு e. விடை தெரியவில்லை

12. பெரியவன் கவிராயரின் காலம் __________

a. 17ஆம் நூற்றாண்டு b. 18ஆம் நூற்றாண்டு c. 19ஆம் நூற்றாண்டு

d. 20ஆம் நூற்றாண்டு e. விடை தெரியவில்லை

13. கூற்றுகளை ஆராய்ந்து சரியானவற்றைத் தேர்வு செய்க
1. நன்னூல் தொல்காப்பியத்தை முதல் நூலாகக் கொண்ட வழி நூல் ஆகும்
2. நன்னூல் கி.பி.12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பவணந்தி முனிவரால் எழுதப்பட்ட ஈரிலக்கண நூலாகும்
3. இந்நூல் 2 அதிகாரங்கள், 10 இயல்கள் (பகுதிகள்), 462 நூற்பாக்களை உடையது
4. சீயகங்கள் என்ற சிற்றரசரின் வேண்டுகோளுக்கிணங்க பவணந்தி முனிவர் நன்னூலை இயற்றினார் என்று பாயிரம் குறிப்பிடுகிறது

a. 1, 2, 4 மட்டும் b. 1, 3, 4 மட்டும் c. 1, 2, 3 மட்டும்
d. 1, 4 மட்டும் e. விடை தெரியவில்லை

14. இரா. மீனாட்சியின் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறை பரிசு பெற்ற நூல்
a. உதய நகரிலிருந்து – 2006 b. கொடி விளக்கு – 2006
c. சுடு பூக்கள் - 2006 d. நெருஞ்சி – 2006
d. விடை தெரியவில்லை

15. பின்வரும் கூற்றுகளை ஆராய்க
1. உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் சாமுவேல் பெப்பிசு ஆவார்
2. ஆங்கிலேயக் கடற்படையில் பணியாற்றிய அவர் இரண்டாம் சார்லஸ் மன்னர் கால நிகழ்வுகளை (1650-1659) நாட்குறிப்பாகப் பதிவு செய்தார்
3. இவரைப் போலவே ஆனந்தரங்கரும் 09.06.1736-11.01.1760 வரை நாட்குறிப்பு எழுதியுள்ளார். இது இந்தியாவின் முதன்மை நாட்குறிப்பு ஆகும்.
4. இதனால் ஆனந்த ரங்கர் ‘இந்தியாவின் பெப்பிசு’ என்று அழைக்கப்படுகிறார்.

a. 1, 2 சரி 3, 4 தவறு b. 1, 3 சரி 2, 4 தவறு
c. 1, 4 சரி 2, 3 தவறு d. அனைத்தும் சரி
e. விடை தெரியவில்லை

16. ஈறுபோதல், முன்னின்ற மெய்திரிதல், தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின இரட்டும், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே ஆகிய வரிசையில் புணர்ந்த சொல் எது?
a. மூதூர் b. நல்லாடை c. வெண்குடை
d. வெற்றிடம் e. விடை தெரியவில்லை

17. பாடும் காலங்களுக்கு ஏற்றவாறு பகல் பண், இரவுப் பண் மற்றும் பொதுப் பண் என்று வகுக்கப்பட்டுள்ளதாக கூறும் நூல் எது?
a. பிங்கல நிகண்டு b. பரிபாடல் c. பதிற்றுப்பத்து
d. சீவக சிந்தாமணி e. விடை தெரியவில்லை

18. ‘நில்’ என்ற வேர்ச்சொல்லின் ஒன்றன்பால் வினைமுற்று யாது?
a. நில்லு b. நின்றான் c. நின்றார்
d. நின்றது e. விடை தெரியவில்லை

19. ‘நேரிய பார்வை எங்கே? நிமிர்ந்த நன்னடை தான் எங்கே’? என்று பாடியவர்
a. சுப்பிரமணிய பாரதியார் b. தந்தை பெரியார்
c. கவியரசு கண்ணதாசன் d. புரட்சிக்கவி பாரதிதாசன்
d. விடை தெரியவில்லை

20. கீழ்க்கண்டவற்றில் எது சரியானது?
சித்தர்களில் கலகக்காரரும் அவர் நூற்றாண்டும்
a. சிவவாக்கியார் - எட்டாம் நூற்றாண்டு
b. பட்டினத்தார் - பதினான்காம் நூற்றாண்டு
c. பட்டினத்தார் - எட்டாம் நூற்றாண்டு
d. சிவவாக்கியார் - ஒன்பதாம் நூற்றாண்டு
e. விடை தெரியவில்லை

21. பிரமிளின் 'வெயிலும் நிழலும்' என்பது __________
a. கவிதைத் தொகுப்பு b. சிறுபதைத்தொகுப்பு
c. கட்டுரைத்தொகுப்பு d. நாடக நூல்
d. விடை தெரியவில்லை

22. ஆசியாவிலேயே முதன் முதலில் சிம்பொனி என்னும் மேற்கத்திய செவ்வியல் வடிவ இசைச் கோவையை உருவாக்கியவர்?
a. இளையராஜா b. ஏ.ஆர். ரகுமான் c. எம்.எஸ்.விஸ்வநாதன்
d. a, b இரண்டும் e. விடை தெரியவில்லை

23. வில்லிப்புத்தூரார் பற்றிய கூற்றுகளில் சரியானவற்றைத் தேர்க
1. வடமொழியில் வியாசர் எழுதிய மகாபாரதத்தைத் தழுவித் தமிழில் வில்லிபாரதத்தை இயற்றினார்
2. தமிழ், வடமொழி ஆகியவற்றில் புலமை பெற்றிருந்த இவரின் காலம் பதினான்காம் நூற்றாண்டாகும்
3. இவரை ஆதரித்த மன்னன் வக்கபாகையை ஆண்ட [வரபதி ஆட்கொண்டான்] ஆவார்
4. வில்லிப்பாரதம் ஆதி பருவம் முதல் செளப்திக பருவம் வரை பத்துப் பருவங்களையும் 4351 விருத்தப்பாக்களையும் கொண்டது

a. 1, 2 மட்டும் சரி b. 1, 2 3 மட்டும் சரி c. 1, 3 மட்டும் சரி
d. 1, 3, 4 மட்டும் சரி e. விடை தெரியவில்லை

24. சரியான முறையில் நிறுத்தக்குறியிடப்பட்ட தொடர் எது?
a. மறைமலையடிகள், 'மரணத்தின் பின் மனிதர்நிலை' என்னும் நூலை இயற்றினார்.
b. மறைமலையடிகள் "மரணத்தின் பின் மனிதர் நிலை' என்னும் நூலை இயற்றியுள்ளார்
c. "மறைமலையடிகள், மரணத்தின் பின் மனிதர்நிலை என்னும் நூலை இயற்றினார்".
d. "செவிச் செல்வம் சிறந்த செல்வம்" என்பர்
e. விடை தெரியவில்லை

25. 'Wisdom' என்ற ஆங்கிலச் சொல்லுக்குரிய கலைச்சொல் எது?
a. ஆன்மா b. சுதந்திரம் c. அறிவு
d. மாண்பு e. விடை தெரியவில்லை

26. பொருந்தாதது எது?
a. அகத்தியம் b. சந்தம் c. செயிற்றியம்
d. தொல்காப்பியம் d. விடை தெரியவில்லை

27. தமிழ் நாடகத் தந்தையான பம்மல் சம்பந்தனார் தனது நாடக அனுபவங்களையெல்லாம் எந்த தலைப்பில் எழுதியுள்ளார்?
a. நாடகமேடை நினைவுகள் b. நாடகத்தமிழ்
c. நடிப்புக் கலையில் தேர்ச்சி பெறுவது எப்பது d. a மற்றும் c இரண்டும்
e. விடை தெரியவில்லை

28. ‘உடைந்த ஏரியைப் பார்க்க ஊரே திரண்டு வந்தது’ - இத்தொடரில் இடம்பெற்றுள்ள ஆகுபெயர் வகை யாது?

a. முதலாகு பெயர்　b. இடவாகு பெயர்　c. காலவாகு பெயர்
d. ஆகபெயர் இடம்பெறவில்லை　e. விடை தெரியவில்லை

29. ‘பொருட்டு, நிமித்தம் என்னும் சொல்லுருபுகள் எந்த வேற்றுமைக்கு உரியன?

a. மூன்றாம் வேற்றுமை　b. நான்காம் வேற்றுமை　c. ஐந்தாம் வேற்றுமை
d. ஆறாம் வேற்றுமை　e. விடை தெரியவில்லை

30. டி.கே.சி தனது வீட்டுக் கூடத்தில் வட்ட வடிவமான தொட்டிக் கட்டி வாரந்தோறும் எந்நாளில் கூட்டம் கூடி இலக்கியம் பற்றி பேசினார்கள்?

a. திங்கள்கிழமை　b. செவ்வாய்கிழமை　c. சனிக்கிழமை
d. ஞாயிற்றுக்கிழமை　e. விடை தெரியவில்லை

31. ‘நோயையும் அதன் காரணத்தையும் அதை நீக்கும் வழியையும் ஆராய்ந்து செயல்பட வேண்டும்’ என திருவள்ளுவர் யாரைக் குறிப்பிடுகிறார்?

a. மனிதன்　b. நோயாளி　c. மருத்துவர்
d. உயிர்கள்　e. விடை தெரியவில்லை

32. ‘ழ’ என்னும் சிற்றிதழை நடத்தியவர்?

a. பிரபஞ்சன்　b. இன்குலாப்　c. பிரமிள்
d. மதுசூதனன்　e. விடை தெரியவில்லை

33. இயற்றமிழின் செழுமையையும் இசைத்தமிழின் இனிமையையும் நாடகத்தமிழின் எழிலினையும் ஒருங்கே கொண்டு முத்தமிழ்க் காவியமாகத் திகழ்வது ___________

a. மனோன்மணீயம்　b. பதிற்றுப்பத்து　c. குற்றாலக்குறவஞ்சி
d. தமிழ்விடு தூது　d. விடை தெரியவில்லை

34. திருவாசகத்தில் உள்ள திருப்பதிகங்களின் எண்ணிக்கை _________

a. 51　b. 58　c. 658
d. 38　e. விடை தெரியவில்லை

35. பொருத்துக

A. விரியன்　1. தண்டை
B. திருகுமுருகு　2. காலாழி
C. நாங்கூழ்ப்புழு　3. சிலம்பு
D. குண்டலப்பூச்சி　4. பாடகம்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 2 | 3 | 4 |
| b. | 3 | 1 | 4 | 2 |
| c. | 1 | 3 | 2 | 4 |
| d. | 3 | 1 | 4 | 2 |

e. விடை தெரியவில்லை

36. ‘நிறைமொழி மாந்தர்’ என்று சித்தர்களைக் குறிப்பிடும் நூல்

a. தொல்காப்பியம்　b. சிலப்பதிகாரம்　c. திருமந்திரம்
d. அகத்திய ஞானம்　e. விடை தெரியவில்லை

37. ஏ.ஆர். ரகுமானுக்கு 2009 ஆம் ஆண்டு ஆஸ்கார் விருது பெற்று தந்த திரைப்படம் எது?

 **044-24339436, 42867555, 9840226187**

a. ஸ்லம்டாக் மில்லியனர் b. வந்தே மாதரம் c. இந்தியன்
d. 127 ஹவர்ஸ் e. விடை தெரியவில்லை

38. இந்தோ-சாரசனிக் கட்டடக்கலை பாணியில் கட்டி முடிக்கப்பட்ட முதல் கட்டடமான சேப்பாக்கம் அரண்மனை கட்டப்பட்ட ஆண்டு?
a. 1964 b. 1762 c. 1768
d. 1765 e. விடை தெரியவில்லை

39. நாத்தொலைவில்லை பிரித்து எழுதுக
a. நாத் + தொலைவு + இல்லை b. நான் + தொலைவு + இல்லை
c. நா + தொலைவில் + இல்லை d. நா + தொலைவு + இல்லை
e. விடை தெரியவில்லை

40. கலிங்கத்துப்பரணி குறித்த கூற்றுகளை ஆய்க
1. இதில் ஐந்நூற்றுத் தொண்ணூற்று எட்டு தாழிசைகள் உள்ளன
2. செயங்கொண்டாரின் சமகால புலவர் ஒட்டக்கூத்தர்
3. வெற்றி கொண்ட நாட்டின் பெயரால் அமைந்த நூல்
4. தமிழில் தோன்றிய முதல் பரணி தக்கயாக்கப் பரணி
a. 1, 3, 4 தவறு 2 சரி b. 1, 2 சரி 3, 4 தவறு
c. 1, 2, 3 சரி 4 தவறு d. அனைத்தும் சரி
e. விடை தெரியவில்லை

41. 'Legend of Tamil Cinema' என்றழைக்கப்பட்டவர்?
a. சாமிக்கண்ணு வின்சென்ட் b. சிவாஜி கணேசன் c. தியோடர் பாஸ்கரன்
d. எம்.ஜி. ராமச்சந்திரன் e. விடை தெரியவில்லை

42. "மூச்சு நின்று விட்டால் பேச்சும் அடங்கும்" யாருடைய கவிதை?
a. கல்யாண்ஜி b. நகுலன் c. வண்ணதாசன்
d. a மற்றும் c e. விடை தெரியவில்லை

43. வி.சி. கணேசனுக்கு 'சிவாஜி கணேசன்' என்று பெயரிட்டவர் யார்?
a. அறிஞர் அண்ணா b. பாலச்சந்திரன் கள்ளிக்காடு
c. எம்.ஜி. ராமச்சந்திரன் d. தந்தை பெரியார்
e. விடை தெரியவில்லை

44. பண்டைய தமிழரின் இல்வாழ்க்கை, ஒழுக்கம், மகளிர் மாண்பு அறவுணர்வு முதலியவற்றை எதன் மூலம் அறியலாம்?
a. திருக்குறள் b. நாலடியார் c. புறநானூறு
d. குறுந்தொகை e. விடை தெரியவில்லை

45. "அளந்து அறியாப் பல பண்டம்
வரம்பு அறியாமை வந்து ஈண்டி" – என்ற பாடல் இடம்பெற்றுள்ள நூல்?
a. கலித்தொகை b. பட்டினப்பாலை c. மதுரைக்காஞ்சி
d. நெடுநல்வாடை e. விடை தெரியவில்லை

46. 126 ஒற்றை வரிகளில் எழுதிய 'துளிகள்' என்னும் நூலின் மூலம் உலகப்புகழ்பெற்ற கிரேக்க நாட்டவர்?
a. ஹோமர் b. ஹிராக்ளிடஸ் c. தாலமி
d. ஸ்ட்ரேபா e. விடை தெரியவில்லை

47. 1995ஆம் ஆண்டில் தமிழ் வளர்ச்சித் துறையின் சிறந்த நூலுக்கான பரிசு பெற்ற வெ. இறையன்பின் "வாய்க்கால் மீன்கள்" ஒரு ___________
a. கவிதை நூல் b. சிறுகதை நூல் c. கட்டுரை நூல்
d. நாவல் (அ) புதினம் e. விடை தெரியவில்லை

48. இராமலிங்க அடிகளார் எந்த இறைவனின் அருளை வேண்டிப் பாடியது தெய்வமணி மாலையாகும்?
a. சென்னை கந்தக்கோட்டத்து முருகப்பெருமான்
b. திருவொற்றியூா சிவபெருமான்
c. சென்னை கந்தக்கோட்டத்து சிவபெருமான்
d. சென்னை வடபழனி முருகப்பெருமான்
e. விடை தெரியவில்லை

49. வை.மு. கோதைநாயகி பற்றிய கூற்றுகளில் சரியானதல்லாதது எது / எவை?
1. வைத்தமாநிதி முடும்பை கோதைநாயகி அம்மாள் என்பதன் சுரக்கமே வை.மு.கோ ஆகும்
2. தன்னுடைய முதல் நூலான 'ஜகன் மோகினி' என்ற நாடக நூலை வெளியிட்டார்
3. நாவல் ராணி, கதா மோகினி, ஏக அரசி என்றெல்லாம் தம் சமகால எழுத்தாளர்களால் அழைக்கப்பட்டார்
4. 'இந்திரமோகனா' என்ற இதழை முப்பந்தைந்து ஆண்டுகள் தொடர்ந்து நடத்தினார்
a. எதுவுமில்லை b. 2, 3, 4 மட்டும் c. 2, 4 மட்டும்
d. 2, 3 மட்டும் e. விடை தெரியவில்லை

50. தவறாகப் பொருந்தியுள்ளது எது?
a. சென்னை இலக்கியச் சங்கம் - 1812
b. கன்னிமரா நூலகம் - 1862
c. கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் - 1869
d. அண்ணா நூற்றாண்டு நூலகம் - 2010
e. விடை தெரியவில்லை

51. கூற்றுகளை சரிபார்க்க
1. மேடையின் ஒரு புறத்திலிருந்து மறு புறத்திற்குச் செல்லுமாறு அமைக்கப்படுவது "ஒரு முகத்திரை"
2. மேடையின் இரு புறத்திலிருந்து நடுவில் ஒன்றொடு ஒன்று பொருந்துமாறு அமைக்கப்படுவது "பொருமுகத்திரை"
3. மேடையின் மேலிருந்து வேண்டும் போது கீழே இறக்கும் வகையில் அமைக்கப்படுவது "கரத்துவரல் திரை"
a. 1, 2, சரி 3 தவறு b. 1, 3 சரி 2 தவறு c. 1, 2, 3 சரி
d. 1 சரி 2, 3 தவறு e. விடை தெரியவில்லை

52. மாம்பலக்கவிச்சிங்க நாவலர் என்று பாராட்டப்பட்டவர். இவரின் இயற்பெயரை கண்டறி?
a. கா. நுமச்சிவநாயனார் b. பழனி c. சிவசங்கர்
d. முரளி e. விடை தெரியவில்லை

53. நன்னூலுக்கான தம் உரையில் ஐம்பெருங்காப்பியம் என்ற சொற்றொடரைக் குறிப்பிட்டவர்?

a. மயிலைநாதர் b. கந்தையப்பர் c. இளம்பூரணார்
d. ஆறுமுக நாவலர் e. விடை தெரியவில்லை

54. பின்வருவனவற்றை ஆய்க
1. காவிரி பூம்பட்டினத்தில் மாரிக்காலத்து மழைமேகம் போல கடல்வழியே வேறு நாடுகளிலிருந்து மரக்கலங்களில் வந்த பொருட்களை இறக்குமதி செய்தனர்
2. நிலத்திலிருந்து வேறு நாடுகளுக்கு ஏற்றுமதியாக அனுப்ப கணக்கிட இயலாத பொருட்கள் பண்டகச் சாலை முற்றத்தில் குவித்து வைக்கப்பட்டிருந்தன
3. அந்தப் பொருள்களுக்குச் சுங்கம் வசூலித்தப் பின் அவற்றின் மீது யானைச் சின்னத்தைப் பொறித்து வெளியே அனுப்பும் சுங்க அதிகாரிகளும் இருந்தனர்
a. 1, 2, 3 சரி b. 2, 3 சரி 1 தவறு c. 1, 3 சரி 2 தவறு
d. 1, 2 சரி 3 தவறு e. விடை தெரியவில்லை

55. சிந்துவெளி எழுத்துரவை ஆய்ந்து திராவிட எழுத்து என்று வரலாற்றில் திருப்பத்தை ஏற்படுத்தியவர்?
a. K.V. சுப்பிரமணியனார் b. மா. இராசமாணிக்கனார்
c. ஐராவதம் மகாதேவன் d. மயிலை சீனி வேங்கடசாமி
d. விடை தெரியவில்லை

56. நான் கதைகளையும் நவீனங்களையும் எழுதுகிறவன் அல்லன். வரலாற்று ஆராய்ச்சி நூல்களையும், தமிழ் இலக்கிய ஆராய்ச்சி நூல்களையும் எழுதுகிறவன். ஆராய்ச்சி நூல்களைப் பெரும்பான்மையோர் படிப்பதில்லை; இதை மிகச் சிறுபான்மையோரே படிக்கின்றனர் என்பதை நன்றாகத் தெரிந்தே ஆராய்ச்சி நூல்களை எழுதுகிறேன்'' – என்று வருந்தி எழுதியவர் யார்?
a. தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் b. கா. சுப்பிரமணியர்
c. ச.த. சற்குணர் d. மயிலை சீனி. வேங்கடசாமி
e. விடை தெரியவில்லை

57. யானை புக்க புலம்போல - இவ்வுவமைக்குப் பொருத்தமான தொடர் எது?
a. தனக்கு பயன்படும், பிறருக்குப் பயன்படாது
b. தனக்கும் பயன்படாது, பிறருக்கும் பயன்படாது
c. பிறருக்குப் பயன்படும், தனக்குப் பயன்படாது
d. தனக்கும் பயன்படும், பிறருக்கும் பயன்படும்
e. விடை தெரியவில்லை

58. பொருத்துக
A. பாம்போடு உடன் உறைந்தற்று — 1. தீக்காய்வார்
B. செத்தார் — 2. சீர அழிக்கும் சூது
C. வறுமை தருவது — 3. கள் உண்பவர்
D. இகல்வேந்தர் சேர்ந்து ஒழுகுவார் — 4. உடம்பாடு இல்லாதவர்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 2 | 3 | 4 |
| b. | 2 | 3 | 4 | 1 |
| c. | 4 | 1 | 3 | 2 |
| d. | 4 | 3 | 2 | 1 |

APOLLO STUDY CENTRE

59. விடைகேற்ற வினாவைத் தேர்க
விடை: பானையின் வெற்றிடமே நமக்குப் பயன்படுகிறது
a. பானையின் எப்பகுதி நமக்குப் பயன்படுகிறது?
b. பானை எப்படி நமக்குப் பயன்படுகிறது?
c. பானை எதனால் நமக்குப் பயன்படுகிறது?
d. பானை எங்கு நமக்குப் பயன்படுகிறது?
e. விடை தெரியவில்லை

60. கரந்தைத் தமிழ்ச்சங்கத்தில் 'ஆசிரியர்' பட்டம் பெற்றவர் யார்?
a. வரதநஞ்சையப் பிள்ளை
b. நீ. கந்தசாமிப்புலவர்
c. பாரதியார்
d. சுப்புரத்தினதாசன்
e. விடை தெரியவில்லை

61. பொருத்துக:
A. இரவுப்பொழுதின் முற்பகுதி - 1. வைகறை
B. இரவுப்பொழுதின் இறுதிப்பகுதி - 2. எற்பாடு
C. இரவுப்பொழுதின் நடுப்பகுதி - 3. யாமம்
D. பகற்பொழுதின் இறுதிப்பகுதி - 4. மாலை

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 1 | 3 | 4 |
| b. | 3 | 4 | 1 | 2 |
| c. | 4 | 1 | 3 | 2 |
| d. | 4 | 3 | 2 | 1 |

e. விடை தெரியவில்லை

62. சரியாக அமைந்த சொற்றொடரைக் கண்டறியவும்.
a. முல்லை முகைவாய் திறந்த நகைவாய்
b. முகைவாய் திறந்த நகைவாய் முல்லை
c. நகைவாய் முல்லை திறந்த முகைவாய்
d. முகைவாய் முல்லை திறந்த நகைவாய்
e. விடை தெரியவில்லை

63. உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின்
வாக்கினிலே ஒளி உண்டாகும் - என்று பாடியவர் யார்?
a. பாரதியார்
b. பாதிதாசன்
c. கண்ணதாசன்
d. சுரதா
e. விடை தெரியவில்லை

64. தமிழ்மொழியின் உபநிடதம் எனப்படுவது
a. நாலாயிர திவ்விய பிரபந்தம்
b. தேவாரம்
c. தாயுமானவர் பாடல்கள்
d. மறுமலர்ச்சிப் பாடல்கள்
e. விடை தெரியவில்லை

65. எட்டுத்தொகை நூல்களுள் புறப்பொருள் பற்றிய நூல்கள் யாவை?
a. பதிற்றுப்பத்து, கலித்தொகை
b. அகநானூறு, புறநானூறு
c. குறுந்தொகை, பரிபாடல்
d. பதிற்றுப்பத்து, புறநானூறு
e. விடை தெரியவில்லை

66. பின்வரும் கூற்றுகளை ஆராய்க.
I. புறநானூற்றின் கடவுள் வாழ்த்துப்பாடலைப் பாடியவர் பெருந்தேவனார் ஆவார்

II. புறநானூற்றின் சில பாடல்களை ஜி.யு. போப் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்

III. பரிபாடல் அகமும், புறமும் கலந்த நூல் ஆகும்.

IV. தற்பொழுது கிடைத்துள்ள பரிபாடலில் புறப்பாடல்கள் மிகுதியாக உள்ளன.

இவற்றுள் தவறானதைக் கண்டறிக.

a. II மட்டும் தவறு b. III மட்டும் தவறு c. IV மட்டும் தவறு

d. எதுவுமில்லை e. விடை தெரியவில்லை

67. பின்வரும் கூற்றுகளை ஆராய்ந்து சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

1. அகநானூற்றை நெடுந்தொகை எனவும் அழைப்பர்
2. இது 13 அடி சிறுமையும் 31 அடிப் பெருமையும் கொண்டுத
3. தொகுப்பித்தவர் உருத்திரசன்மர் ஆவார்
4. இது களிற்றியானைநிரை, மணிமிடைப்பவளம், நித்திலக்கோவை என மூன்று பிரிவுகளை உடையது

a. 1, 3, 4 சரி b. 2, 4 தவறு c. 1, 2, 4 சரி

d. 1, 3 தவறு e. விடை தெரியவில்லை

68. பொருத்துக:

A. பேயனார் 1. மருதம்

B. ஓதலாந்தையார் 2. முல்லை

C. கபிலர் 3. நெய்தல்

D. அம்மூவனார் 4. குறிஞ்சி

E. ஓரம்போகியார் 5. பாலை

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 5 | 2 | 1 |
| b. | 2 | 5 | 4 | 3 | 1 |
| c. | 2 | 4 | 3 | 2 | 5 |
| d. | 4 | 2 | 1 | 5 | 3 |

e. விடை தெரியவில்லை

69. ஐங்குறுநூற்றின் சரியான திணைவைப்பு முறையைக் கண்டுபிடி.

a. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை

b. மருதம், பாலை, குறிஞ்சி, முல்லை, நெய்தல்

c. மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை, முல்லை

d. முல்லை, குறிஞ்சி, நெய்தல், மருதம், பாலை

e. விடை தெரியவில்லை

70. விகுதி தனியே வராமல் துணையாக பெற்றுவரும் எழுத்து எவ்வாறு அழைக்கப்படுகிறது?

a. பகுதி b. சாரியை c. இடைநிலை

d. எழுத்துப்பேறு e. விடை தெரியவில்லை

71. இலக்கணக்குறிப்பு தருக. இல்பருவம்

a. வினைத்தொகை b. பண்புத்தொகை

c. ஐந்தாம் வேற்றுமைத்தொகை d. உரிச்சொற்றொடர்

e. விடை தெரியவில்லை

72. பின்வரும் கூற்றுகளை ஆராய்ந்து சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.

I. மனோன்மணியம் நூல் லிட்டன்பிரபு ஆங்கிலத்தில் எழுதிய இரகசிய வழி நூலைத் தழுவி எழுதப்பெற்றது

II. மனோன்மணீயம் நூலின் இடையே சிவகாமி சரிதம் என்னும் துணைக்கதை இடம்பெற்றுள்ளது

III. மனோன்மணீயத்தில் ஐந்து அங்கங்களும், இருபது காட்சிகளும் இடம் பெற்றுள்ளன.

IV. பெ. சுந்தரம்பிள்ளை அவர்கள் திருவனந்தபுரம் அரசர் கல்லூரியில் தத்துவப் பேராசிரியாக பணிபுரிந்தார்.

a. I, III, IV சரி b. II, III, IV தவறு c. III, IV தவறு

d. அனைத்தும் சரி e. விடை தெரியவில்லை

73. நெற்சேர உழுதுழுது பயன் விளைக்கும்
நிறையுழைப்புத் தோள்களெலாம் எவரின் தோள்கள் - என்று பாடியவர் யார்?

a. பாரதியார் b. பாரதிதாசன் c. சுந்தரம்பிள்ளை

d. கண்ணதாசன் e. விடை தெரியவில்லை

74. "காரியம் மிகப்பெரிது, எனது திறமை சிறிது" என்று எந்த நூலுக்கான முகவுரையில் பாரதியார் குறிப்பிடுகின்றார்?

a. கண்ணன் பாட்டு b. குயில்பாட்டு c. பாஞ்சாலி சபதம்

d. பாரதியார் கவிதைகள் e. விடை தெரியவில்லை

75. கண்ணுதல் - இலக்கணக் குறிப்பு தருக.

a. ஒருபொருட்பன்மொழி b. பண்புத்தொகை c. இலக்கணப்போலி

d. வினைத்தொகை e. விடை தெரியவில்லை

76. அற்பு தப்பழ ஆவணங் காட்டி
வடிய னாளென்னை ஆளது கொண்ட – என்று மனம் உருகிப் பாடியவர் யார்?

a. அப்பர் b. மாணிக்கவாசகர் c. சம்பந்தர்

d. சுந்தரர் e. விடை தெரியவில்லை

77. பெருமாள் திருமொழியில் இடம்பெற்றுள்ள பாடல்களின் எண்ணிக்கை

a. 103 b. 105 c. 108 d. 97 e. விடை தெரியவில்லை

78. பொருத்துக:

A. நாகலாபுரம் 1. குலசேகர ஆழ்வார்

B. திருநாவலூர் 2. சுந்தரர்

C. திருவஞ்சிக்களம் 3. வரதநஞ்சையப் பிள்ளை

D. தோரமங்கலம் 4. உமறுப்புலவர்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 1 | 3 | 2 |
| b. | 3 | 4 | 1 | 2 |
| c. | 2 | 1 | 3 | 4 |
| d. | 4 | 2 | 1 | 3 |

e. விடை தெரியவில்லை

79. கதம்பம் என்பதே கலம்பகம் என திரிந்தது என்றவர் யார்?

a. குமரகுருபரர் b. உ.வே.சா c. ஒட்டக்கூத்தர்

d. பாரதியார் e. விடை தெரியவில்லை

80. பின்வருவனவற்றுள் பண்புப்பெயர்ப் புணர்ச்சியில் இடம்பெறாதது எது?

a. ஆதிநீடல் b. உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்

c. முன்னின்ற மெய்திரிதல் d. அடியகரம் ஐயாதல்

e. விடை தெரியவில்லை

81. இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் ________ மிகும்

a. கசடதபற b. ர, ழ c. ய, வ

d. கசதப e. விடை தெரியவில்லை

82. பொருத்துக:

a. எதிர்கால இடைநிலை — 1. க, இய, இயர்

B. எதிர்மறை இடைநிலை — 2. ஆ, அல், இல்

C. வியங்கோள் வினைமுற்று விகுதி — 3. மின்

D. ஏவல் பன்மை வினைமுற்று விகுதி — 4. ப், வ்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 2 | 1 | 3 |
| b. | 2 | 1 | 4 | 3 |
| c. | 3 | 1 | 2 | 4 |
| d. | 4 | 1 | 2 | 3 |

e. விடை தெரியவில்லை

83. இன்றுநீர் சிந்தும் இரத்தமோர் துளியும்
நின்றுகம் பலவும் நிகழ்த்துமே - இந்த வீரஉரையை எழுதியவர் யார்?

a. பாரதிதாசன் b. சுந்தரம்பிள்ளை c. தாராபாரதி

d. பாலசுப்பிரமணியம் e. விடை தெரியவில்லை

84. பின்வருவனவற்றுள் தவறாகப் பொருந்தியுள்ளதைக் கண்டறிக.

a. சொக்கலிங்கம் பிள்ளை - தென்றல் விடு தூது

b. வேதநாயக சாத்திரியார் - சென்னப்பட்டணப் பிரவேசம்

c. சுந்தரம்பிள்ளை - நூல் தொகை விளக்கம்

d. ந. கருணாநிதி - தண்ணீர் வங்கிகள்

e. விடை தெரியவில்லை

85. பின்வரும் கூற்றுகளை ஆராய்ந்து சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.

I. திருப்பாவையை வேதம் அனைத்திற்கும் வித்து என அழைப்பர்

II. இது நாலாயிர திவ்யபிரபந்தத்தில் மூன்றாவது பிரபந்தமாக வைக்கப்பட்டுள்ளது

III. பாவை என்பது சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று

IV. திருப்பாவையில் மொத்தம் 30 பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

a. III மட்டும் தவறு b. III, IV மட்டும் தவறு c. அனைத்தும் சரி

d. I, II, III மட்டும் சரி e. விடை தெரியவில்லை

86. கல் மனத்தையும் கரையச் செய்யும் பக்திப் பாடல்களின் தொகுப்பு

a. இரட்சணிய யாத்திரிகம் b. இரட்சணிய மனோகரம்

c. போற்றித் திருவகவல் d. இரட்சணிய பாலபோதனை

e. விடை தெரியவில்லை

87. பொருளறிந்து சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.

| | குறங்கு | பரவை | உரவு |
|---|---|---|---|
| a. | வானரம் | உயிரினம் | வலிமை |
| b. | விலங்கு | கடல் | சுற்றம் |
| c. | தொடை | கடல் | வலிமை |

d. தொடை சிறந்த சொல்
e. விடை தெரியவில்லை

88. இவ்விடத்தில் பயன்படுத்தப்பட வேண்டிய புணர்ச்சிவிதி அறிந்து பொருத்துக.

A. பெரு + களிறு — 1. முன்னின்ற மெய்திரிதல்
B. வெம் + சினம் — 2. இனமிகல்
C. பசு + நிணம் — 3. ஆதிநீடல்
D. செம் + அடி — 4. அடியகரம் ஐயாதல்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 2 | 1 |
| b. | 2 | 4 | 3 | 1 |
| c. | 2 | 1 | 4 | 3 |
| d. | 1 | 2 | 3 | 4 |

e. விடை தெரியவில்லை

89. பொருத்துக:

A. 1, 3, 5, 7, 9 — 1. முல்லை
B. 6, 16 — 2. மருதம்
C. 4, 14 — 3. நெய்தல்
D. 10, 20 — 4. பாலை
E. 2, 8 — 5. குறிஞ்சி

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| a. | 4 | 1 | 5 | 3 | 2 |
| b. | 4 | 2 | 1 | 3 | 5 |
| c. | 2 | 3 | 1 | 4 | 5 |
| d. | 4 | 2 | 5 | 1 | 3 |

e. விடை தெரியவில்லை

90. குறிஞ்சி திணைக்குரிய உரிப்பொருள்

a. இருத்தலும் இருத்தல் நிமித்தமும்
b. ஊடலும் ஊடல் நிமித்தமும்
c. பிரிதலும் பிரிதல் நிமித்தமும்
d. புணர்தலும் புணர்தல் நிமித்தமும்
e. விடை தெரியவில்லை

91. சரியாகப் பொருந்தியுள்ளதைக் கண்டறிக.

A. பொய்யா நாவிற் கபிலன் - மாறோக்கத்து நப்பசலையார்
B. நல்லிசைக் கபிலன் - பெருங்குன்றூர்க் கிழார்
C. வாய்மொழிக் கபிலன் - நக்கீரர்
D. புலனழுக்கற்ற அந்தணாளன் - பொருந்தில் இளங்கீரனார்

a. அனைத்தும் சரி
b. A, C, D மட்டும் சரி
c. B, C, D மட்டும் சரி
d. A, B, C மட்டும் சரி
e. விடை தெரியவில்லை

92. ஐங்குறுநூற்றில் ‘மறுதரவுப் பத்து’ என்னும் தலைப்பு இடம்பெற்றுள்ள திணை வகை யாது?

a. குறிஞ்சி
b. முல்லை
c. பாலை
d. மருதம்
e. விடை தெரியவில்லை

93. பின்வரும் சிலப்பதிகார உரையாசிரியர்கள் பற்றிய குறிப்புகளை ஆய்வு செய்து பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.

I. சிலப்பதிகாரத்திற்கு உரையெழுதிய பழைய உரையாசிரியர்கள் அரும்பத உரைகாரர் மற்றும் அடியார்க்கு நல்லார் ஆவர்.

II. அரும்பதங்களுக்கு மட்டும் உரையெழுதிய அரும்பதகாரர் உரை நூல் முழுமைக்கும் உள்ளது

III. விளக்கமாக உரையெழுதிய அடியார்க்கு நல்லார் உரை நூல் முழுமைக்கும் கிடைக்கவில்லை

a. I மட்டும் சரி b. II மற்றும் III சரி c. அனைத்தும் சரி

d. அனைத்தும் தவறு e. விடை தெரியவில்லை

94. கூற்றுகளை ஆராய்க.

I. திருவள்ளுவர் கி.மு. 31-ல் தோன்றியவரென்று கருதி திருவள்ளுவராண்டு முறை கணக்கிடப்படுகிறது

II. இவர் கி.பி. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்ற கருத்தும் பரவலாக உள்ளது

III. இவற்றுள் சரியானக் கூற்றைக் தேர்ந்தெடுக்க.

a. I மட்டும் சரி b. II மட்டும் சரி c. இரண்டும் சரி

d. இரண்டும் தவறு e. விடை தெரியவில்லை

95. கவிஞர்கள் தாம் கருதிய பொருளுக்கு ஒத்ததாக வேறொன்றைக் கூறி அப்பொருளைப் புலப்படுத்துவது எவ்வாறு அழைக்கப்படுகிறது?

a. உருவக அணி b. தொழிலுவமையணி

c. இல்பொருள் உவமையணி d. பிறிதுமொழிதலணி

e. விடை தெரியவில்லை

96. துயிலாநின்ற - இதில் இடம்பெற்றுள்ள பெயரெச்சம்

a. இறந்தகால பெயரெச்சம் b. நிகழ்கால பெயரெச்சம்

c. எதிர்கால பெயரெச்சம் d. எதிர்மறைப் பெயரெச்சம்

e. விடை தெரியவில்லை

97. பின்வரும் கூற்றுகளை ஆராய்க.

I. பெ. சுந்தரம்பிள்ளை கேரள மாநிலத்தில் பிறந்தவர்

II. தமிழக அரசின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை இயற்றியவர்

III. திருவனந்தபுரம் அரசர் கல்லூரியில் தத்துவப் பேராசிரியாகப் பணியாற்றினார்

IV. சென்னை மாகாண அரசு இவருக்கு 'ராவ் பகதூர்' பட்டம் வழங்கிச் சிறப்பித்தது இவற்றுள் சரியான கூற்றுகளைக் கண்டறிக.

a. I, II, III சரி b. I, II, IV சரி c. அனைத்தும் சரி

d. II, IV மட்டும் சரி e. விடை தெரியவில்லை

98. சிலப்பதிகார நிகழ்வுகளையும், அவை இடம்பெற்றுள்ள காண்டத்தையும் பொருத்துக:

A. கோவலன், மாதவியின் காதல் வாழ்வு — 1. மதுரைக்காண்டம்

B. கண்ணகிக்கு கோயில்கட்டிய செங்குட்டுவனின் வீரம் — 2. வஞ்சிக்காண்டம்

C. கணவனை இழந்த கண்ணகியின் அவலம் — 3. புகார்க்காண்டம்

| | A | B | C |
|---|---|---|---|
| a. | 1 | 2 | 3 |
| b. | 2 | 1 | 3 |
| c. | 3 | 1 | 2 |
| d. | 3 | 2 | 1 |

e. விடை தெரியவில்லை

99. புகழ்பெற்ற வெண்ணிப் பறந்தலைப் போர் எந்த இரு அரசர்களுக்கிடையே நடைபெற்றது?
a. செங்காணன் - கணைக்கால் இரும்பொறை
b. கரிகாற் சோழன் - பெருஞ்சேரலாதன்
c. கரிகாற்சோழன் - கணைக்கால் இரும்பொறை
d. பாண்டியன் நெடுஞ்செழியன் - சேரன் செங்குட்டுவன்
e. விடை தெரியவில்லை

100. சிறப்பில் சிதடும் உறுப்பில் பிண்டமும், கூனும் குறளும் ஊமும் செவிடும் - என்று பிறரிடம் ஆதரவு பெறத் தகுதியானவர்களைப் பட்டியலிடும் நூல்
a. மணிமேகலை b. நெடுந்தொகை c. புறநானூறு
d. அறநெறிச்சாரம் e. விடை தெரியவில்லை

101. பின்வரும் கூற்றுகளை ஆராய்ந்து விடையளிக்கவும்
1. மிளகுநீரை உப்புநீர் என்பது வைணவர் மரபு
2. ஆசிரியரை ஐயர் என்றழைப்பது வேலூர் ஆம்பூர் வட்டத்தார் மரபு.
3. அமிழ்தத்தை சாத்தமுது என்பது சீரங்கம் கோவில் மரபு
4. மங்கல நிகழ்ச்சிகளுக்கு கீற்று வேய்வதனைக் கொட்டகை என்பது செட்டிநாட்டு மரபு
a. அனைத்தும் சரி b. 1, 3 மட்டும் சரி c. 2, 4 மட்டும் தவறு
d. 1, 3 மட்டும் தவறு e. விடை தெரியவில்லை

102. பின்வரும் உரைநடை நூல்களை அதன் ஆசிரியர்களோடு பொருத்துக:
A. கவிதை 1. கலியாண சுந்தரனார்
B. நீதிநூல்களில் இலக்கிய நயம் 2. சிதம்பரநாதன்
C. சமரசம் 3. இளவழகனார்
D. வாழ்க்கை 4. வையாபுரிப்பிள்ளை

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 2 | 1 | 3 |
| b. | 3 | 1 | 4 | 2 |
| c. | 4 | 3 | 2 | 1 |
| d. | 1 | 4 | 3 | 2 |

e. விடை தெரியவில்லை

103. பின்வரும் கூற்றுகளை ஆராய்ந்து விடையளிக்கவும்.
I. இன்று சிற்றிலக்கியங்களாக கருதப்படும் நூல்கள் ஒருகாலத்தில் பெருங்காப்பியங்களின் உறுப்பாக இருந்தவை ஆகும்.
II. பாட்டியல் நூல்கள் சிற்றிலக்கியங்களின் இலக்கணத்தை விளக்குகின்றன.
III. வீரமாமுனிவர் தனது சதுரகராதியில் பிரபந்தம் தொண்ணூற்றாறு எனக்கூறி அவற்றின் பெயர்களையும் குறிப்பிட்டுள்ளார்.
a. அனைத்தும் சரி b. I, II மட்டும் சரி c. II, III மட்டும் சரி
d. I, II மட்டும் சரி e. விடை தெரியவில்லை

104. உதவி வரைத்தன் றுதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து - இக்குறளில் பயின்றுவரும் அணி யாது?
a. சொல் பின்வரு நிலையணி b. சொற்பொருள் பின்வரு நிலையணி
c. பொருள் பின்வரு நிலையணி d. எதுவுமில்லை
e. விடை தெரியவில்லை

105. பின்வருவனவற்றுள் சரியாகப் பொருந்தாததைக் கண்டறிக.

a. உளை – சேறு b. தாழி – குடம்
c. கிலி – பலம் d. வாலை – மீன்வகை
e. விடை தெரியவில்லை

106. தூதின் இலக்கணம் கூறும் நூல்
a. அழகர் கிள்ளைவிடு தூது b. இலக்கண விளக்கம்
c. காரிகை d. புறப்பொருள் வெண்பாமாலை
e. விடை தெரியவில்லை

107. "ஓங்குமலைச் சிலம்பில் பிடவுடன் மலர்ந்த" எனத் தொடங்கும் பாடலை எழுதியவர்
a. உருத்திரசன்மர் b. ஔவையார் c. பரணர்
d. நரிவெருத்தலையார் e. விடை தெரியவில்லை

108. தேவாரம் எனப்படுவது
a. முதல் 7 திருமுறைகள் b. முதல் 5 திருமுறைகள்
c. முதல் 6 திருமுறைகள் d. 63 நாயன்மார்களும் பாடியது
e. விடை தெரியவில்லை

109. "அழகிய மணவாளதாசர்" என அழைக்கப்படுபவர் யார்?
a. அயோத்தி தாசர் b. பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்
c. இராமச்சந்திர கவிராயர் d. பலபட்டடை சொக்கநாத புலவர்
e. விடை தெரியவில்லை

110. முடியரசன் பற்றி தவறான கூற்று
a. பூங்கொடி காவியம் தமிழக அரசு பரிசு பெற்றது
b. பறம்பு மலையில் கவியரசு பட்டம் பெற்றார்
c. இவரது கவிதைகளை சாகித்ய அகாடமி பிரெஞ்சிலும், சமஸ்கிருதத்திலும் மொழி பெயர்த்து வெளியிட்டுள்ளது
d. காவியப்பாவை இவர் எழுதியது
e. விடை தெரியவில்லை

111. சிற்பி பாலசுப்பிரமணியம் பற்றி தவறான கூற்று எது?
a. காரைக்குடி உயர்நிலைப் பள்ளி தமிழாசிரியராக இருந்தவர்
b. பாரதியார் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறை தலைவர்
c. சாகித்ய அகாதமி மொழிபெயர்ப்பு விருது 2001 (அக்னி சாட்சி நாவல்)
d. தமிழ்நாடு அரசு கலைமாமணி விருது (2009)
e. விடை தெரியவில்லை

112. கருணாநிதி முதுகலைத் தமிழாசிரியராக பணியாற்றி பள்ளி எது?
a. வாணியம்பாடி மேல்நிலைப்பள்ளி
b. காரைக்குடி மேல்நிலைப்பள்ளி
c. பூவிருந்தவல்லி மேல்நிலைப்பள்ளி
d. மதுரை சபாபதி மேல்நிலைப்பள்ளி
e. விடை தெரியவில்லை

113. கீழ்க்கண்டவற்றில் தவறான கூற்று எது?
a. கரி - மிளகு
b. குறங்கு - தொடை
c. மரை - மான்
d. அலறி - அழுது
e. விடை தெரியவில்லை

114. பொருத்துக:
A. வல்லை 1. அறிவுடையவர்
B. சாகாடு 2. தளராமை
C. ஒள்ளியவர் 3. உதவி
D. ஒல்காமை 4. விரைவில்
E. வேளாண்மை 5. வண்டி

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| a. | 1 | 5 | 4 | 2 | 3 |
| b. | 5 | 3 | 1 | 2 | 4 |
| c. | 3 | 5 | 1 | 2 | 3 |
| d. | 4 | 5 | 1 | 2 | 3 |

e. விடை தெரியவில்லை

115. கூற்றை வைத்து நபரைக் கண்டறிக:
1. திருவனந்தபுரம் அரசர் கல்லூரியில் தத்துவப் பேராசிரியராகப் பணிபுரிந்தார்.
2. நூல் தொகை விளக்கம், திருஞானசம்பந்தர் கால ஆராய்ச்சி, திருவிதாங்கூர்ப் பண்டை மன்னர் கால ஆராய்ச்சி முதலிய நூல்கள் இயற்றியுள்ளார்.
3. சென்னை மாகாண அரசு இவருக்கு ராவ்பகதூர் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.
4. இவரது பாடலை 23 நவம்பர் 1970 அன்று தமிழ்நாடு மாநில கீதமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது

a. ரா.பி. சேதுப்பிள்ளை
b. பாரதியார்
c. பாரதிதாசன்
d. பெ. சுந்தரம்பிள்ளை
e. விடை தெரியவில்லை

116. பொருத்துக: கலிங்கத்துப் பரணி பற்றிய கூற்றுகள்
A. ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மான வனுக்கு வகுப்பது பரணி — 1. ஒட்டக்கூத்தர்
B. நாள்மீன் பெயரே நூலுக்கும் பெயரானது — 2. பாட்டியல் நூல்
C. தென்தமிழ் தெய்வப் பரணி — 3. உ.வே.சா
D. பரணிக்கோர் சயங்கொண்டான் — 4. பலபட்டடைச் சொக்கநாதர்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 1 | 3 | 4 |
| b. | 4 | 3 | 2 | 1 |
| c. | 2 | 3 | 1 | 4 |
| d. | 4 | 3 | 2 | 1 |

e. விடை தெரியவில்லை

117. கூற்றைக் கொண்டு நபரைக் கண்டறிக:
1. சாதி மறுப்புத் திருமணஞ் செய்து கொண்டவர்
2. தனது மறைவின் பொழுதும் எச்சடங்குகளும் வேண்டா என்றவர்
3. காரைக்குடி மீ.சு. உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணிபுரிந்தவர்
4. திராவிட நாட்டின் வானம்பாடி பட்டம் பேரறிஞர் அண்ணா (1957)ல் வழங்கினார்

a. கண்ணதாசன்
b. சிற்பி பாலசுப்பிரமணியம்
c. ந. காமராசன்
d. முடியரசன்
e. விடை தெரியவில்லை

118. தவறானக் கூற்றைக் கண்டறி:
1. ந. கருணாநிதி கடலூர் மாவட்டம் மயிலாடுதுறையில் பிறந்தவர்.
2. சென்னைப் பல்கலைக் கழகத்தில் புலவர் பட்டத்தேர்வில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்
3. தொல்காப்பியம் முழுமைக்கும் உரைஎழுதி உள்ளார்
4. 'நமக்குள்ளே மலரட்டும் நல்லிணக்கம்' இவரது கவிதை நூல் ஆகும்.

a. 1 தவறு
b. 1, 2 தவறு
c. 4 தவறு
d. 2, 4 தவறு
e. விடை தெரியவில்லை

119. வீரசோழியம் கூறும் முப்பகை எது?
a. அவா, வெகுளி, அச்சம்,
b. பொய், காமம், களவு
c. காமம், வெகுளி, மயக்கம்
d. அவா, காமம், வெகுளி
e. விடை தெரியவில்லை

120. பொருத்துக:

A. அடிவாழ்த்துவம் — 1. தன்மை பன்மை வினைமுற்று
B. திருந்துமொழி — 2. அடுக்குத் தொடர்
C. வாழிய வாழிய — 3. இரண்டாம் வேற்றுமைத் தொகை
D. வாழ்த்துவம் — 4. வினைத்தொகை

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 2 | 1 |
| b. | 3 | 4 | 2 | 1 |
| c. | 1 | 4 | 2 | 3 |
| d. | 3 | 4 | 1 | 2 |

e. விடை தெரியவில்லை

121. துறவியராகிய மெய்யுணர்ந்தோர் கண்டபொருள் இதுவென அதன் இயல்பை உணர்த்தியது ________

a. வினைமுற்றிய தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது
b. புணர்ந்து நீங்கிய தலைவனைத் தோழி வரைவு கடாயது
c. பொருண்மொழிக் காஞ்சித்துறை
d. நற்றாய் கூற்று
e. விடை தெரியவில்லை

122. பொருத்துக –அடிவரையரை

A. குறுந்தொகை — 1. 3-6
B. நற்றிணை — 2. 13-31
C. அகநானூறு — 3. 4-8
D. ஐங்குறுநூறு — 4. 9-12

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 2 | 1 | 3 |
| b. | 3 | 4 | 2 | 1 |
| c. | 3 | 2 | 1 | 4 |
| d. | 4 | 3 | 2 | 1 |

e. விடை தெரியவில்லை

123. "உள்ளுதோ றுள்ளுதோ றுள்ளம் உருக்குமே
வள்ளுவர் வாய் மொழி மாண்பு"

a. கபிலர் b. பரணர் c. மாங்குடிமருதனார்
d. தேனிக்குடி கீரனார் e. விடை தெரியவில்லை

124. பொருத்துக:

A. பல்லவர் 1. அழகர் கோவில் திருவரங்கம்
B. பாண்டியர் 2. நார்த்தாமலை விசயாலய சோழீச்சுவரம்
C. சோழர் 3. திருப்பத்தூர் திருத்தளிநாதர்
D. நாயக்கர்கள் 4. காஞ்சி கைலாசநாதர்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 4 | 2 | 1 |
| b. | 4 | 3 | 2 | 1 |
| c. | 1 | 2 | 3 | 4 |
| d. | 2 | 3 | 4 | 1 |

e. விடை தெரியவில்லை

125. சிறுநுதல் - இலக்கணக் குறிப்பு தருக.

a. வினைத்தொகை
b. இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை
c. அன்மொழித்தொகை
d. ஏழாம் வேற்றுமைத்தொகை
e. விடை தெரியவில்லை

126. நா. காமராசன் எழுதாத நூல் எது?

a. தாஜ்மஹாலும் ரொட்டித்துண்டும் b. சகாராவைத் தாண்டாத ஒட்டகங்கள்
c. சூரியகாந்தி d. நல்ல உலகம் நாளை மலரும்
e. விடை தெரியவில்லை

127. பொருத்துக:

A. ஐயாறப்பர் 1. கட்கநேத்ரி
B. செம்பொன்பள்ளியார் 2. விருத்தகிரீச்சுரர்
C. வாள்நெடுங்கண்ணி 3. பஞ்சநதீசுவரர்
D. பழமலைநாதர் 4. சொர்ணபுரீச்சுரர்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 4 | 1 | 2 |
| b. | 3 | 1 | 4 | 2 |
| c. | 4 | 3 | 2 | 1 |
| d. | 1 | 2 | 3 | 4 |

e. விடை தெரியவில்லை

APOLLO STUDY CENTRE

128. பாரதியின் ‘முப்பெரும் படைப்புகள்’ எனப் போற்றப்படுபவை
a. பாப்பா பாட்டு, குயில் பாட்டு, மறவன்பாட்டு
b. பாப்பா பாட்டு, பாஞ்சாலிபாட்டு, கண்ணன்பாட்டு
c. பாஞ்சாலி சபதம், கண்ணன்பாட்டு, குயில்பாட்டு
d. பாப்பா பாட்டு, குயில் பாட்டு, கண்ணன்பாட்டு
e. விடை தெரியவில்லை

129. அகநானூற்றின் வேறுபெயர்
a. நெடுந்தொகை b. பெருந்தொகை c. நெடும்பாட்டு
d. அகநறை e. விடை தெரியவில்லை

130. ‘ஆழி மழைக் கண்ணா’ என கண்ணனை அழைப்பவர் யார்?
a. ஆண்டாள் b. குலசேகரர் c. பெரியாழ்வார்
d. நம்மாழ்வார் e. விடை தெரியவில்லை

131. சிலப்பதிகார உரைகளுள் தற்காலத்தில் சிறந்த உரை யார் எழுதியது.
I. புலியூர் கேசிகன் II. நாரண வேலுப்பிள்ளை
III. ந.மு. வேங்கடசாமி நாட்டார் IV. சிலம்பொலி செல்லப்பனார்
a. I & II b. III & IV c. III மட்டும்
d. IV மட்டும் e. விடை தெரியவில்லை

132. தமிழரசி குறவஞ்சி யாருடைய தலைமையில் அரங்கேற்றப்பட்டது.
a. இராமலிங்க அடிகள் b. சரவண அடிகள் c. ஞானியாரடிகள்
d. அம்பலத்தடிகள் e. விடை தெரியவில்லை

133. ‘நல்லது செய்த லாற்றீ ராயினும்
அல்லது செய்த லோம்புமின்’ எனக் கூறியவர் யார்?
a. ஔவையார் b. மோசிகீரனார் c. கிள்ளி வளவன்
d. நரிவெரூஉத்தலையார் e. விடை தெரியவில்லை

134. திருக்குறள் அறத்துப் பாலில் உள்ள இயல்கள்
a. அரசியல், அங்கவியல், ஒழிபியல்
b. பாயிரவியல், இல்லறவியல் துறவறவியல், ஊழியல்
c. களவியல் கற்பியல்
d. அரசியல், அங்கவியல், ஊழியல்
e. விடை தெரியவில்லை

135. சதுரகராதியைத் தொகுத்தவர்
a. உ.வே. சாமிநாதய்யர் b. மீனாட்சி சுந்தரனார்
c. திரு.வி. கலியாண சுந்தரனார் d. வீரமா முனிவர்
e. விடை தெரியவில்லை

136. எழுவகைப் பருவமாதரின் வரிசை முறை:
a. பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண்
b. பெதும்பை, பேதை, மடந்தை, மங்கை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண்
c. பெதும்பை, பேதை, மங்கை, மடந்தை. தெரிலை, அரிவை, பேரிளம் பெண்
d. பேதை, பெதும்பை, அரிவை, தெரிவை, மங்கை, மடந்தை, பேரிளம்பெண்
e. விடை தெரியவில்லை

137. மூவருலாவில் இடம்பெறும் அரசர்கள்

a. விக்கிரம் சோழன், மூன்றாம் குலோத்துங்கன், இரண்டாம் இராசராசன்
b. விக்கிரம சோழன், முதல் குலோத்துங்கன், மூன்றாம் இராசராசன்
c. விக்கிரமசோழன், இரண்டாம் துலோத்துங்கன், முதல் இராசராசன்
d. விக்கிரமசோழன், இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் இராசராசன்
e. விடை தெரியவில்லை

138. சைவவைணவங்களை ஒருங்கிணைக்கும் சிற்றிலக்கியம்
a. குற்றாலக்குறவஞ்சி b. மூவருலா c. முக்கூடற்பள்ளு
d. மதுரைக்கலம்பகம் e. விடை தெரியவில்லை

139. சாதியும் மதமுஞ் சமயமுந் தவிர்ந்தேன்
சாத்திரக் குப்பையுந் தணந்தேன் - இவ்வாறு கூறியவர்
a. விவேகானந்தர் b. கபீர்தாசர் c. இராமானுஜர்
d. வள்ளலார் e. விடை தெரியவில்லை

140. நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மீசையா கொன்றோ - இவ்வாறு கூறியவர்
a. ஔவையார் b. கபிலர் c. நலங்கிள்ளி
d. இராவணன் e. விடை தெரியவில்லை

141. மொழிக்கு முதற்காரணமாகவும் பிற எழுத்துக்கள் தோன்றுவதற்கு காரியமாகவும் அமைந்த எழுத்துக்களை ________ என்பர்.
a. உயிர் எழுத்துக்கள் b. சார் பெழுத்துக்கள்
c. முதல் எழுத்துக்கள் d. உயிர் மெய்யெழுத்துக்கள்
e. விடை தெரியவில்லை

142. பொருத்துக
A. பிராகாமியம் 1. உலக படைப்புகளை எல்லாம் அடக்கி ஆளும் ஆற்றல்
B. ஈசத்துவம் 2. விரும்பியதை முடிக்கும் ஆற்றல்
C. வசித்வம் 3. படைக்கவும் அடக்கவும் கொண்ட ஆற்றல்
D. காமாவசயித்வம் 4. இயற்கை தடைகளை கடக்கும் ஆற்றல்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 1 | 2 |
| b. | 2 | 3 | 1 | 4 |
| c. | 1 | 2 | 4 | 3 |
| d. | 3 | 4 | 1 | 2 |

e. விடை தெரியவில்லை

143. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லை அறிக.
a. Homograph- மெய்யெழுத்து b. Consonant - ஒப்பெழுத்து
c. Monolingual - ஒருமொழி d. Discussion - உரையாடல்
e. விடை தெரியவில்லை

144. ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து சரியான சொல்லைத் தேர்வு செய்க: உண்டாக்குதல்
a. விலை b. விளை c. விழை
d. விடை e. விடை தெரியவில்லை

145. ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து சரியான இணையைத் தேர்ந்தெடுக்கவும்
'நேமி - கோடு''

a. நற்சொல் - தோள்	b. சக்கரம் - மலை	c. நேமிநாதம் - நேரான வழி
d. மலை - வனம்	e. விடை தெரியவில்லை

146. கீழே தரப்பட்டுள்ளவற்றுள் பொருத்தமற்றதைத் தேர்வு செய்க.
a. ‘உண்ணாது’ என்பது எதிர்மறை வினையெச்சம்
b. ‘அகழ்வார்’ என்பது வினையால் அமையும் பெயர்
c. ‘நன்று’ என்பது குறிப்பு வினைமுற்று
d. ‘ச’ என்பது வேர்ச்சொல்
e. விடை தெரியவில்லை

147. “கல்வியில் சிறந்த தமிழ்நாடு”- புகழ் கம்பன் பிறந்த தமிழ்நாடு” எனக்கூறியவர் யார்?
a. பாரதியார்	b. கவிமணி	c. பாரதிதாசன்
d. திருவள்ளுவர்	e. விடை தெரியவில்லை

148. திருக்குறள் போன்றே அறம்,. பொருள், இன்பம் என்னும் முப்பால் பகுப்புகளைக் கொண்ட நூல் எது?
a. நற்றினை	b. ஏலாதி	c. நாலடியார்
d. நற்றிணை	e. விடை தெரியவில்லை

149. கலைஞர் கருணாநிதியின் “வரலாற்றுப் புனைவுகளில்” தவறானதை தேர்வு செய்க
a. ரோமாபுரி பாண்டியன் - 1974
b. தென்பாண்டிச் சிங்கம் - 1983
c. பொன்னர் சங்கர் - 1988
d. ஒருமரம் பூத்தது – 1979
e. விடை தெரியவில்லை

150. எழுத்தாளர் தேவிபாரதி குறித்த தவறானக் கூற்றினைக் கண்டறிக
a. தமிழ் எழுத்தாளர் தேவிபாரதியின் (நீர்வழி படும் நாவல்)
b. இது தமிழ் நாட்டில் கொங்கு மண்டலத்தில் “குடி நாவிதர்” என்ற சமூக பார்ப்பணர்களின் வாழ்க்கையை சித்தரிக்கிறது
c. “நொய்யல்” தேவிபாரதியின் நாவல்களில் முதன்மையாக வெளிவந்தது
d. தேவிபாரதியின் சிறுகதைகளில் காந்தியை பற்றிய “பிறகொரு இரவு” போன்றவை கவனிக்கப்பட்ட படைப்புகள்
e. விடை தெரியவில்லை

APPOLLO STUDY CENTRE




STUDY CENTRE